# பல்வேறு நியதிகளை பயன்படுத்தி பொருளாதார வகைப்படுத்துவர்



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

தேர்ச்சி மட்டம் - 1.6

## பொருளாதார அமைப்புக்களை வகைப்படுத்தும் நியதிகள்

- தீர்மான தொடர்பாடல் பொறிமுறை
- ஊக்குவிப்புக்களின் நியதிகள்
- வளங்களின் உரிமைத்தன்மை

## தீர்மான தொடர்பாடல் பொறிமுறைக்கு அமைவாக பொருளாதார முறைமைகளின் வகைப்படுத்தல்

- சந்தைப் பொருளாதார முறைமை
- கட்டளை பொருளாதார முறைமை
- கலப்பு பொருளாதார முறைமை

## உற்பத்தி வளங்கள், அவற்றின் உடமை, சொத்துரிமை, அடிப்படையில் பொருளாதார முறைமைகள்

- முதலாளித்துவ பொருளாதாரம்
- சோசலிச பொருளாதாரம்

## ஊக்குவிப்பு முறைகள் வருமாறு

- பொருள் ரீதியான பிரதிபலனை கொண்ட ஊக்குவிப்பு
- ஒழுக்க விழுமிய ஊக்குவிப்புக்கள்
- அதிகார அடிப்படையிலான ஊக்குவிப்புக்கள்

கணினிவடிவமைப்பு : திரு இ.டீயோனி த.தொ.தொ. ஆசிரியர் (மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## முதலாளித்துவ பொருளாதாரம்/சந்தைப்பொருளாதாரம்/சுதந்திரசந்தைப்பொருளாதாரம்

### பண்புகள்

- சொத்துக்களின் உரிமை தனியாருக்கு உரியது
- விலைப்பொறிமுறை மூலம் அடிப்படைப்பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படும்
- தனிநபர் முயற்சியாண்மை காணப்படும்
- தெரிவுச்சுதந்திரம் காணப்படும்
- வரையறுக்கப்பட்ட அளவு அரச தலையீடு காணப்படும்
- உச்ச இலாப நோக்கம் காணப்படும்

## முதலாளித்துவ பொருளாதாரத்தில் அடிப்படை பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் முறைகள்

### எதை,எந்தளவு, உற்பத்தி செய்தல்

உச்ச இலாப நோக்கில் விலைப்பொறிமுறையானது வள ஒதுக்கீட்டை வழிநடத்தும் அதாவது ஒப்பீட்டு ரீதியில் இலாபம் உழைக்க கூடிய உற்பத்திகளுக்கு வளங்களை ஒதுக்கீடு செய்யும்

### எவ்வாறு உற்பத்தி செய்தல்

விலைப்பொறிமுறையானது உச்ச இலாப நோக்கில் செலவு குறைந்த தொழில்நுட்பத்தை தெரிவு செய்ய வழிகாட்டும் அதாவது இழிவுச்செலவு அடிப்படையில் தொழிநுட்ப தெரிவை மேற்கொள்ளும்

### யாருக்காக உற்பத்தி செய்தல்

விலைப்பொறிமுறையானது உச்ச இலாப நோக்கில் எப்பிரிவினர் உயர்நிலை செலுத்த தயாராக உள்ளனரோ அப்பிரிவினருக்கு அதிகளவு உற்பத்திகளை பங்கீடு செய்ய வழிகாட்டும்



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**இதனடிப்படையில் விலைப்பபொறிமுறையின் தொழிற்பாடுகளை பின்வருமாறு நோக்கப்படும்**

- தகவல்களையும், சமிக்ஞைகளையும் வழங்குதல்
- ஊக்குவிப்புக்களை வழங்குதல்
- பங்கீடு செய்தல்

## கட்டளைப்பொருளாதாரம்

மத்திய திட்டமிடல் குழுவினரால் வழங்கப்படும் கட்டளைமூலம் அடிப்படையில் பொருளாதார பிரச்சனைகளை தீர்த்துக்கொள்ளும் பொருளாதாரங்கள்

**பண்புகள்**


உழைப்பு தவிர்ந்த ஏனைய வளங்கள் அரச உடமையாக இருத்தல்

மத்திய திட்டமிடல் குழுவால் அடிப்படை பிரச்சினைகள் தீர்வு காணப்படுகின்றது

சமூகநலன் நோக்கிலான தீர்வுகள்

பொது நலனுக்காக அரசு இயங்குதல்

## கட்டளைப்பொருளாதாரத்தின் தோல்விக்கான காரணங்கள்






Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## கட்டளைப்பொருளாதாரத்தில் அடிப்படை பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் முறைகள்

### எதை,எந்தளவு, உற்பத்தி செய்தல்

திட்டமிடல் குழுவினால் சமூகநலன் நோக்கில் நாட்டின்நலனை விருத்தி செய்யக்கூடிய உற்பத்திகளுக்கு வளப்பங்கீடு இடம்பெறுகிறது

### எவ்வாறு உற்பத்தி செய்தல்

திட்டமிடல் குழுவினால் சமூகநலன் நோக்கில் நாட்டின்நலனை விருத்தி செய்யக்கூடியவாறு வளக்கிடைப்பனவுகளின் அடைப்படையில் பொருத்தமான தொழில்நுட்பம் தெரிவுசெய்யப்படும்

### யாருக்கு உற்பத்தி செய்தல்

திட்மிடல் குழுவானது நாட்டின் வருமான ஏற்றத்தாழ்வுகளை குறைக்ககூடிய வகையில் சீரான வருமானப்பங்கீட்டை மேற்கொள்ளும்

## கலப்பு பொருளாதாரம்



சந்தைப்பொறி முறையினாலும் திட்டமிடல் செயற்பாட்டினாலும் வளஙங்களை ஒதுக்கீடு செய்தல் பெருமளவிற்கு ஒன்றிற்கு ஒன்று சமனாக இருத்தல் கலப்பு பொருளாதாரம் ஆகும்

**பண்புகள்**

- பொருளாதாரத்தில் பிரதான தொழிற்பாட்டு அலகுகளாக உற்பத்தியாளர், நுகரவோர், காரணிவள உடமையாளர், அரசு என்பன காணப்படும்
- சுயநலன், பொதுநலன், அடிப்படையில் தீர்வுகள் காணப்படல்
- சொத்துடமை தனியாரிடமும் அரசிடமும் காணப்படல்
- வள ஒதுக்கீடானது விலைப்பொறிமுறை மூலமும் திட்டமிடல் குழுவினராலும் இடம்பெறும்
- அரசு பல முக்கிய பொருளாதார செயற்பாடுகளை மேற்கொள்ளும்



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பொருளாதார முறைமை தொடர்பான புதிய போக்குகள்

முதலாளித்துவ பொருளாதாரத்தில் திட்மிடல் பொறிமுறையும், சமவுடமை பொருளாதாரத்தில் விலைப்பொறிமுறையினையும் உள்ளடக்கிய மாற்றுச்சேர்க்கைகளை கொண்ட புதிய பொருளாதார முறைமைகளை தற்போது காணமுடிகிறது. அவையாவன:

- சமூக சந்தைப்பொருளாதாரங்கள்
- சமவுடமை சந்தைப்பொருளாதாரங்கள்
- சுட்டிக்காட்டும் திட்டமிடல் பொருளாதாரங்கள்

## சமூக சந்தைப்பொருளாதாரங்கள்



சந்தை பொருளாதாரங்களில் சமூக நியாயத்துவத்தை ஏற்படுத்துவதற்கு அரசு தலையிடும் பொருளாதாரங்கள் இதுவாகும் அதாவது சமூக நலனில் அதிகம் அக்கறையுள்ள பொருளாதார அமைப்பாகும். இங்கு வள உடமை தனியாருக்கு இருப்பினும் அவற்றின் பயன்பாடு தொடர்பாக அதிகளவு தாக்கத்தை அரசு மேற்கொள்ளும். அதாவது பின்வருவன தொடர்பில் அரசு அதிகம் அக்கறை

- பொருளாதாரங்கள்
- அரசியல்
- உள்நாட்டு நிர்வாகம்
- உள்நாட்டு நிர்வாகம்
- மனித உரிமைகளை பாதுகாத்தல்
- சூழல் பாதுகாப்பு

இவற்றின் ஊடாக விரிவான சமூக வலைப்பின்னல் ஒன்றை அரசு ஏற்படுத்திகொள்கின்றது, இதற்கு தேவையான நிதியை அரசு வரியின் மூலம் பெற்றுக்கொள்கின்றது
உதாரணம்:- நோர்வே, சுவீடன், பின்லாந்து



கணினிவடிவமைப்பு : திரு இ.டீயோனி த.தொ.தொ. ஆசிரியர் (மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## சமவுடமை சந்தை பொருளாதாரங்கள்

சமவுடமை பொருளாதாரத்தில் குறிப்பிட்ட ஒரு எல்லைக்கு அப்பால் சந்தை சக்திகளை இயங்க அனுமதிக்கும் பொருளாதாரம் ஆகும். இவற்றில் வள உடமை தனியாருக்குரியதாக இருப்பினும் அவற்றின் பயன்பாடு தொடர்பாக தீர்மான உரிமை தனியாருக்குரியதாகும்.அதாவது சந்தை சக்திகளுக்கு உற்பத்தியளவு, விலைத்தீர்மானம் போன்ற தீர்மான சுதந்திரம் காணப்படும்

உதாரணம்:- சீனா, பல்கேரியா, கங்கோலி

## புதிய பாரம்பரிய பொருளாதார முறைமை

சமயம்,பாரம்பரிய சமூகம் என்பவற்றை அடிப்படையாக கொண்டு இயங்கும் பொருளாதாரம் ஆகும்

## பொருளாதார அமைப்பொன்றின் செயலாற்றுகைகளை மதிப்பிடக்கூடிய நியதிகள்

- நிறைதொழில்மட்டம்
- பொருளாதாரத்தின் வினைத்திறன்
- பொருளாதார வளர்ச்சி
- பொருளாதார உறுதிப்பாடு
- நியாயத்துவம்
- வெளிநாட்டு உறுதி
- சூழலின் தர ரீதியான தன்மை
- பொருளாதார சுதந்திரம்

**குறிப்பு:-** பாடத்திட்டத்தில் குறிப்பிடா விடினும் மாணவர் தமது மேலதிக அறிவுக்காக இப்பொருளாதார முறைமைகளின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் அறிந்து கொள்ள முடியும்



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## சந்தை பொருளாதாரங்களின் அனுகூலங்களும் பிரதிகூலங்களும்

| அனுகூலங்கள் | பிரதிகூலங்கள் |
| --- | --- |
| உற்பத்தி வினைத்திறன் காணப்படும் | வள ஒதுக்கீட்டில் வினைத்திறன் இல்லை |
| தொழில் சுதந்திரம், நுகர்வோர் இறைமை காணப்படுதல் | வெளி வாரிகளை கருத்தில் கொள்ளாமை |
| உற்பத்தியின் தரம் அளவு கருத்தில் எடுக்கப்படும் | நிறைவிலிப்போட்டி காரணமாக நுகர்வோர் பாதிப்படைதல் |
| தனியார் சொத்துரிமை அதிக பொருளாதார அக்கறையை ஏற்படுத்தல் | பொருளாதார சமமின்மை காணப்படும் |
| போட்டிச்சூழல் புதிய கண்டுபிடிப்புக்களைத் தூண்டும் | பொது வளம் சுரண்டப்படுதல் |

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk